**FRIDAY SERMON/ வெள்ளிக்கிழமை குத்து.்.பா**

**16 June 2017 (21 Ramadan 1438 Hijira)**

# The Last Ten days of Ramadan

## ரமலானின் இறுதி பத்து நாட்கள்



**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

சலாமிற்கு பிறகு தஸ்ஹீதும் தஅவசும் அல்.்.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு தம் உரையினை ஆரம்பித்தார்.

1. **அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்.**
2. **மகத்துவமிக்க இரவில் இதை (குர்-ஆனை) நாம் அருளினோம்.**
3. **மகத்துவமிக்க இரவு என்றால் என்னவென உமக்கு எப்படித் தெரியும்?**
4. **மகத்துவமிக்க இரவு ஆயிரம் மாதங்களைவிட சிறந்தது.**
5. **வானவர்களும் ரூஹும் அதில் தமது இறைவனின் கட்டளைப்படி ஒவ்வொரு காரியத்துடனும் இறங்குகின்றது.**
6. **ஸலாம்! இது வைகறைவரை இருக்கும். (97 : 1-6)**

உங்கள் அனைவருக்கும் தெரிந்தது போன்று ரமலான் மாதத்தின் மூன்றாம் பகுதியில் நாம் நுழைந்திருக்கின்றோம். இனிவரும் இரவுகளில் ஒரு குறிப்பிட்ட இரவிலாகும் ஆயிரம் மாதங்களைவிட சிறப்புமிக்க ஒரு இரவுள்ளது. அதை நமக்கு இபாதத் வாயிலாகவே அடைந்துவிட முடிவது. சதாரண நேரங்களின் நாம் புரிகின்ற இபாதத்துகளும் அதில் உட்பட்டவாறேயிருக்கும்.

ஒரு ஹதீஸில் கூறப்பட்டிருப்பது போன்று, அதாவது நம் அன்புக்குரிய தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார். **“இது ஒரு மாதமாகின்றது. இம்மாதத்தின் முதல் பகுதியில் அல்லாஹ்விடமிருந்து கருணை இறங்கிக் கொள்கின்றது. இரண்டாம் பகுதியில் அல்லாஹ் விடமிருந்து மன்னிப்பு இறங்கிக் கொள்கின்றது. இறுதி பகுதியில் நரக தண்டனையிலிருந்துள்ள மீட்சி கிடைக்கின்றது” (புகாரி)**

மற்றொரு ஹதிஸில் ஹஸ்ரத் அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள் தெரிவிக்கின்றார்கள். அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் ரமலான் மாதத்தைக் குறித்து விவரிக்கின்றார்கள்.

**“ரமலான் மாதம் ஆரம்பித்திருக்கின்றது. அதில் ஒரு இரவு ஆயிரம் மாதத்தை விட சிறப்புமிக்கதாகும். எவர் ஒருவர் இதன் அருட்களிலிருந்து அகன்று நிற்கின்றாரோ அவர் உண்மையில் அனைத்து நன்மைகளிலிருந்து அகன்றுக் கொள்கின்றார். நிச்சயமாகவும் அவர் இதன் நன்மையிலிருந்து துரத்தியடிக்கப்பட்டவராகயிருக்கின்றார்”** (இப்னுமாஜ மிஸ்க்காத்)

திருக்குர்ஆனின் அல்கத்தர் அத்தியாயத்தின் வசனங்களுடைய அடிப்படையிலும் உங்கள் முன் சமர்ப்பித்த திருநபி வசனத்தினுடைய அடிப்படையிலும் இந்த வசனங்கள் எந்த சூழ்நிலையில் இறக்கப்பட்டது என்பதை ஒருமுறைக் கூட விளக்கிக் கொள்வது மிக நன்கு என நான் எண்ணுகின்றேன். வருடங்கள் வந்தும் திரும்ப சென்றுமிருக்கும். ஆனால் அல்லாஹ்வின் வார்த்தைகளும் போதனைகளும் அவனது தூதர்(ஸல்) வின் பாடங்களும் குற்றமற்றதாக என்றென்றும் நிலைநிற்கும். இப்போதனைகளை மேலும் உங்களுக்காக விளக்கி கொள்தல் என்பது என் கடமையாகும், இந்த எல்லா ரீதிகளும் முஸ்லீம்கள் என்ற நிலையில் நம் வரலாற்றின் பகுதியாகும். அத்தகையான ஒரு வரலாறு இறுதிநாள் வரையிலும் நிலைநிற்கவேண்டும்

என்பது அவசியமாகும். இஸ்லாமிக போதனைகளை உலகில் ஒளிக்கச் செய்ய இவ்வகை கொடுக்கல் வாங்கல் முறை அத்தியாவசியமாகும்.

ஒருமுறை பரிசுத்த தூதர் (ஸல்) அவர்கள் ஒரு சூபியின் கதையை விவரித்தார். அன்னாரின் பெயர் சம்சூண் (ரலி) என்றாகும். இஸ்ரவேல் மக்களில் ஆகும் அன்னார் வாழ்ந்திருந்தது. அன்னார் மிக அதிகம் துவா செய்பவரும் அல்லாஹ்வின் வழியில் அயராத உழைப்பவராகவுமிருந்தார். 1000 வருடக்காலம் அது தொடர்ந்தது. இவ்வார்த்தையை கேட்ட திருநபி (ஸல்) அவர்களின் தோழர்கள் ஹஸ்ரத் சம்சூண் (ரலி)யை தாண்டி முன்செல்ல நமக்கு இயலாது என எண்ணி கவலைக் குரியவர்களாக மாறினர். அந்நேரம் ஒரு ஊக்குவித்தல் என்ற நிலையில் அல்லாஹ் கூறினான்.

**"முஹம்மது நபி(ஸல்) வின் சமுதாயம் "லைலத்துல் கதரில்" (மகத்துவமிக்க இரவு) ஆராதனைச் செயல்களில் மூழ்கி கொண்டால் அவர்களின் அப்பிரார்த்தனைகள் வாயிலாக ஆயிரம் மாதம் செய்யும் ஆராதனையை விட சிறந்த பிரதிபலன்கள் நாம் அவர்களுக்கு அளித்துக் கொள்வேன்"**

ஆகவே "லைலத்துல் கதர்" மிக விலை வாய்ந்ததும் அருட்களால் நிறைந்ததுமாகும். நம் அன்புக்குரிய தூதர் முஹம்மது(ஸல்) வின் உம்மத்தின் மீது அல்லாஹ் பொழிந்த மிக மகத்தான அருட்கொடையே ஆகும். இவ்வகையான ஒரு இரவை அல்லாஹ் வழங்கியது மூலம் அவனது பக்தராகிய அடியார்களுக்கு மனதார இறைவனை ஆராதித்துக் கொள்ள முடிந்துவிடுகின்றது. (எண்ணமற்ற அருட்களை பெற்றுக்கொள்ள முடிந்து விடும்) அதாவது "லைலத்துர் கதர்" இரவை அவர்களுக்கு மிக பெரிய அளவில் இறையருட்களை அறுவடை செய்ய முடிந்துவிடும். ஆயிரம் மாதத்தின் ஆராதனையை விட சிறந்த அருட்களை அடைந்துவிட முடிந்துவிடும். கடந்து சென்ற இறை தூதர்களின் சமுதாயங்களுக்கு இத்தகையிலான ஒரு மகத்துவமிக்க இரவை, அதாவது ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) மும் மற்று மலக்குகளும் இறை கட்டளைகளுடன் பூமியில் இறங்கிக்கொள்ளும் ஒரு கண்ணியமிக்க இரவு கடந்து சென்ற சமுதாயங்களில் இருந்ததில்லை. அது முஸ்லீம்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கின்றது. அம்மலக்குகள் (அந்த இரவில்) தெய்வீக அமைதியுடன் முஸ்லீம்களிடம் இறங்கி கொள்கின்றனர். அதாவது எவர் இறை ஆராதனையில் மூழ்கியிருக்கின்றார்களோ அவர்களுக்காக அந்நேரம் இறங்கிக்கொள்ளும் மலக்குகளின் சங்கம் பிரார்த்தனையில் ஈடுபடுகின்றனர். அவர்களின் பாவமன்னிப்புகாக பிரார்த்தனை செய்கின்றனர். அல்லாஹ்வின் அபாரமான ஞானத்தால் அந்த குறிப்பான இரவு, அந்த மகத்துவமிக்க இரவு பரிசுத்த ரமலான் மாதத்தின் இறுதி இரவுகளில் ஒன்றிலாகும் என்ற உண்மையை அவன் மறைத்து வைத்துள்ளான். அதை கண்டு கொள்ள முஸ்லீம்களுக்கு மிக கடினமான உழைப்பை மேற்கொள்ள வேண்டியதாகயிருக்கும். இக்காரணத்தால் அவர்களின் தன்னம்பிக்கை அதிகரித்து கொள்ளவும் இந்த இரவுகளில் அல்லாஹ்வை ஆராதித்துக் கொள்வதில் அவர்கள் மூழ்கிடவும் செய்கின்றனர். அது வழியாக

அவர்களுக்காக மறைத்து வைத்திருக்கும் மகத்துவமிக்க இரவின் இறையருட்களை பாகப்படுத்தியெடுத்துக் கொள்ள முடிந்து விடுகின்றது. அதற்காக அவர்கள் அவர்களின் நேரத்தை தியாகம் செய்கின்றனர். அவர்களின் தூக்கங்களை தவிர்த்துக் கொள்கின்றனர். அவ்வாறு அல்லாஹ்வின் திருப்தியை அடைய பல தியாகங்களுக்கும் அவர்கள் சுயம் ஆளாகிக் கொள்கின்றனர். அக்காரணத்தால் ஏராளமான மடங்கு அருளும் நன்மைகளும் அந்த இரவில் அவர்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ரிப்போர்ட் செய்திருக்கும் ஒரு நபி மொழியில் காணலாம். "**மற்று நாள்களின் இரவுகளுமாக ஒப்பிட்டுக் கொண்டால் ரமலான் மாதத்தின் இறுதி பத்து இரவுகளில் தூதர் (ஸல்) அவர்கள் தம் ஆராதனையை இருமடங்காக அதிகரித்து கொள்வார்.**" (முஸ்லீம் மிஷ்காத்) நபி மொழிகளின் அடிப்படையில் பார்த்தால், இறுதி பத்துநாள்களின் ஒற்றை எண் வரிசையிலான இரவிலாகும் லைலத்துர் கதிர் என காணமுடிகின்றது. அதாவது 21,23,25,27,29 என்ற இரவுகளிலாகும் லைலத்துல்கதிர் தோன்றுவது என குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மேல் கூறிய நபிமொழியின் அடிப்படையில் அந்த மகத்துவமிக்க இரவில் தாம் தூயதூதர் (ஸல்) அவர்களுக்கு திருக்குர்-ஆன் முதலாவதாக இறக்கப்பட்டது என புரிந்துக்கொள்ளலாம். தூயதூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் கூட அந்த மகத்துவமிக்க இரவைப்பற்றி ஒரு குறிப்பான தேதியை தெரிவித்ததில்லை. ஆனால் அந்த மஹாத்மா அவர்கள் வழங்கிய அறிகுறி என்பது ரமலான் மாதத்தின் இறுதி பத்து இரவுகளில் ஒற்றை எண் வரிசையிலான இரவில் நீங்கள் அதை தேடிக் கொள்ளுங்கள் என்று மட்டுமாகும்.

மகத்துவமிக்க இரவைக் குறித்து இஸ்லாமின் வல்லமை வாய்ந்த பண்டிதர்கள் விளக்கங்கள் வழங்கியிருக்கின்றனர். இந்த குறிப்பான இரவு ரமலானின் 27-ம் இரவு என்று தங்களின் கருத்தை தெரிவித்திருக்கின்றனர். **ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி), ஹஸ்ரத் முஹைத்தீன் ஷேக் அப்துல் காதிர் ஜீலானி (ரலி)** போன்ற அறிஞர்களாகிய பண்டிதர்கள் 7 ன் முக்கியத்துவத்தை குறித்து விளக்கமளித்திருக்கின்றனர். அவ்வகை மகத்துவம் ஒற்றை எண்களாகிய 3,5,9 போன்றவைக்கு வழங்கப்பட வில்லை. இவ்விஷயத்தில் அவர்களின் ஆய்வு கீழ்கூறும் காரணங்களின் அடிப்படையிலாகும்.

1. **7 ஆகாயங்களும் 7 பூமியும்**
2. **ஒரு வாரத்தில் 7 இரவுகளும் 7 பகல்களும்**
3. **கஆபாவுக்கு சுற்றும் நாம் 7 தவாப் செய்ய வேண்டும்.**
4. **சபா மர்வா குன்றுகளுக்கிடையே 7 முறை நாம் ஓடிட வேண்டும்.**
5. **குகை வாசிகளாகிய நண்பர்கள் 7 பேர்கள் இருந்தனர். இவ்விஷயம் திருக்குர் ஆனில் சூரா.ஃ.கஹ்பில் குறிப்பிடபட்டிருக்கின்றது. திருக்குர்ஆனில் குகைகளில் வாழ்ந்திருந்த மொத்த நபர்களுடையவும் எண்ணிக்கை குறிப்பிடவில்லையென்றாலும் ஆராய்வு வாயிலும் உறுதிவாய்ந்த தேடிக்கொள்தல் மூலமும் நூற்றாண்டுகள் வழியாக பாதுகாத்து வரப்பட்ட வரலாற்றிலிருந்தும் இந்த அறிஞர்களாகிய பண்டிதர்கள் உறுதிப்படுத்திய**

**தீர்மானங்கள்ப்படி குகையில் வாழ்ந்திருந்தவர்களின் எண்ணிக்கை 7 பேர்கள் என்றாகும்.**

6. **இன்னும் அவர்களின் ஆழமான ஆராய்வு வாயிலாக ஹஸ்ரத் யூசுப்(அலை) அவர்கள் சிறையில் இருந்த காலஅளவு 7 வருடம் என்றாகும்.**
7. **அரசனுக்காக ஹஸ்ரத் யூசப்(அலை) அவர்கள் கனவை விளக்கிக் கொண்டது (சூரா: யூசுப்) 7 கொழுத்த பசுக்களும் 7 மெல்லிய பசுக்களும் ஆகின்றது.**
8. **24 மணி நேரத்திற்குள் நாம் 17 ரக்காத் கடமைப்படுத்தப்பட்ட தொழுகையை செய்கின்றோம்.**
9. **ஓவ்வொரு தொழுகையிலும் நம் தொழுகை முழுமைப்பெற்றதாக கருதப்பட 7 நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.**

இக்காரணங்களைக் கொண்டு அவர்களைப் பொறுத்தவரையில் 7க்கு மற்று ஒற்றையெண்களைவிட முக்கியத்துவமுண்டு. லைலத்துல் கதிர் என்ற வார்த்தையும் 9 எழுத்துகளைக் கொண்டதாகும். சூரா.:. அல்கதரில் இது மூன்று தடைவ கூறப்படுகின்றது. அந்த மூன்றை(3) ஒன்பது (9) கொண்டு பெருக்கும் பொழுது 27 என்ற எண்ணில் எட்ட முடிகின்றது.

திருக்குர்ஆனின் போதனைகள் படியும் குறிப்பிடப்பட்ட நபி மொழிகள் படியும் அந்த இரவின் மகத்துவமும், மதிப்பும், அதன் நிலையும் நாம் உணர்ந்துக் கொண்டோம். அந்த இரவில் உள்ளடக்கம் செய்திருக்கும் அருட்களுடைய ஆழமும் விரிவும் பகுத்தறிந்துக் கொள்ள வேண்டியதேயாகும். ஹஸ்ரத் அபூகுறை(ரலி) அவர்கள் விவரித்துக் கொள்கின்றார். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார். **“அல்லாஹ்வில் நின்று பிரதிபலன் நாடியவாறு களங்கமற்ற நம்பிக்கையுடன் எவர் ஒருவர் ரமலான் மாதத்தில் நோன்பு நோற்கின்றாரோ அவரது கடந்த கால பாவங்கள் யாவும் மன்னிக்கப்படுகின்றது. அல்லாஹ்விடமிருந்துள்ள பிரதிபலன் நாடியவாறு களங்கமற்ற உள்ளத்துடன் எவர் ஒருவர் மகத்துவமிக்க இரவில் பிரார்த்தனைச் செய்கின்றாரோ அவரது கடந்த கால பாவங்களனைத்தும் மன்னிக்கப்படுகின்றது”** (புகாரி)

மற்றொரு நபிமொழியில் ஹஸ்ரத் ஆயிஷா(ரலி) அவர்கள் ரிப்போர்ட் செய்கின்றார். அவர் தூதர் (ஸல்) விடத்தில் வினவினார் யா! ரசூலல்லாஹ் லைலத்துல் கதிர் எந்த இரவில் என்பதை குறித்து எனக்கு பகுத்தறிவு கிடைத்தால் அவ்வேளையில் நான் என்ன செய்ய வேண்டும்? தூதர்(ஸல்) அவர்கள் பதிலளித்தார். “இந்த பிரார்த்தனையை மேலும் மேலும் செய்ய வேண்டும். **“அல்லாஹும்மா இன்னக்க அப்வன் துஹிப் புல் அப்வ இப்பாப் அன்னீ”** (அல்லாஹ்வே நீ மன்னிக்க கூடியவன். நீ மன்னிப்பை விரும்புகின்றாய். ஆகவே நீ என்னை மன்னிப்பாயாக) (மிஸ்காத், இப்னுமாஜ, திர்மிதி) இத்திக்காப்” பைக் குறித்து ஒரு சிறு விளக்கம் கூட வழங்கிட நான் எண்ணுகின்றேன். “இத்திக்காப்” **(ITIKAAF)** என்றால் ஆன்மீகத்திற்காக ஓரிடத்தில் தங்கி கொள்தல் என்று பொருள். மேலும் சற்று தெளிவாக கூறினால்

அல்லாஹ்வை அதிகமான நிலையில் நினைவு கூறுவதற்கும் பிரார்த்தனை செய்து கொள்வதற்கும் இத்திக்காப் என கூறப்படுகின்றது. எவராவது இத்திக்காப் இருப்பதற்காக எண்ணினால் அவர் கீழ்வருமாறு கூறிக்கொள்ள வேண்டும்.

**“நவய்த்து சுன்னத்தல் இத்திக்காப் லில்லாஹி தஆலா” (அல்லாஹ்வின் திருப்தியை அடைவதற்காக முஹம்மது நபி (ஸல்) அவர்களின் நடைமுறையான இத்திக்காப்பிற்காக நான் “நிய்யத்” செய்கின்றேன்)**

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் விவரிக்கின்றார்கள் **“ரமலானின் இறுதி பத்து நாட்கள் தூய தூதர் (ஸல்) அவர்கள் இத்திக்காப்பிற்காக பள்ளி வாயிலில் தங்கியிருப்பார். அச்செயல் அன்னாரின் மரணம் வரையிலும் நீடித்தது”. அன்னாரின் மரணத்திற்கு பிறகு அன்னாரின் மனைவிகள் பள்ளிவாயிலில் இத்திக்காப் இருந்தனர்.”** (புகாரி முஸ்லீம்)

அபூகுறை (ரலி) அவர்கள் விவரிக்கின்றார். **“அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு வருடமும் “இத்திக்காப்” இருந்திருந்தார். அன்னார் வபாத்தான வருடம் 20 நாட்கள் “இத்திக்காப்” இருந்தார்.”** (புகாரி)

**“நம் அன்புக்குரிய தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் வாழ்ந்திருந்த இறுதி ரமலானில் ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அதாவது ஜிப்பீல் என்ற மலக்கு ரசூல் (ஸல்) வை சந்திப்பதற்காக வருகை தரவும் திருக்குர் ஆனை முழுமையாக இரண்டுமுறை வாசிக்க வைக்கவும் செய்தது”** (புகாரி)

ஆகவே என் தோழர்களே, முஸ்லீம்களே, குர்ஆனையும் சுன்னத்தையும் பின்பற்றிக் கொள்வதன் முக்கியத்தை நீங்கள் உணர்ந்துக் கொள்ளுங்கள். குறிப்பாக மேலும் ஒரு ரமலானை சந்திப்பதற்காக உங்களுக்கு அவன் வழிவகுத்திருக்கும் இவ்வேளையில்! இம்மாதத்தின் இரவுகளையும் பகலுகளையும் வீணாக்காமலிருக்க வேண்டும். முடிந்தவரையில் இபாதத்திற்காகவே உங்களின் நேரங்களை பயன்படுத்திக் கொள்ளுங்கள். **லைலத்துல் கதரின்** நற்பலன் உங்களுக்கு கிடைத்துவிடும் என்ற எதிர்பாரலை கைவிடாமலிருங்கள். நீங்கள் எதிர் பாரல்களுடன் அல்லாஹ்வின் மீதான திட நம்பிக்கையுடனிருந்தால் அந்நேரம் உங்களின் எதிர்பாரலை போன்று, அவனது அருட்கள் இறங்கி கொள்ளும். அவனது அருட்களுக்கு நீங்கள் ஆளாகிக் கொள்வீர்கள். மன்னிப்பையும் பெற்று விடுவீர்கள். அது வாயிலாக நரக அக்கினியிலிருந்து உங்களுக்கு மீட்சியும் கிடைத்துவிடும். நீங்கள் உங்கள் **“நப்ஸை”** கட்டுப்படுத்திக் கொள்ளும் வாயிலாகவே இதை அடைந்து விடுவது. அந்நேரம் அல்லாஹ் அவனது கருணையினை உங்கள் மீது பொழிந்துக் கொள்வான். அது வாயிலாக உங்களிடம் குடி கொள்ளும் சாத்தானை உங்களுக்கு முஸ்லீமாக பரிணமிக்கச் செய்ய முடிந்திடட்டும்! நம் எஜமானருக்கு முடிந்தது போன்று! அப்படியானால் நரகத்தின் வாயில் நமக்கு முன் என்றென்றைக்குமாக அடைந்து விடுகின்றது. அத்தோடு சொர்க்கத்தின் வாயில் நமக்குமுன் என்றென்றைக்குமாக திறந்துக் கொள்ளவும் செய்கின்றது. இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.

நீங்கள் உணர்ந்துக் கொள்ளுங்கள்! நீங்கள் வாழ்ந்திருக்கும் இந்த நூற்றாண்டு ஒரு “லைலத்துல் கதரின்” காலமாகும். இறைச்செய்தியினை வழங்குவதற்காக “ரூஹில்குத்சு”மாக தோன்றிய ஒருவரின் நட்பு வட்டாரத்திற்குள் ஆகிவிடுவது வாயிலாக உங்களுக்கு முற்றிலும் சிறந்த பாக்கியமே கிடைக்கின்றது. நீங்கள் எல்லா நிலையிலும் பாக்கியசாலிகளே ஆவீர்கள். உலகில் அமைதியினை வரவழைப்பதற்கும் மக்கள் இதயங்களில் அல்லாஹ்வின் ஏகத்துவத்தை நிலை நாட்டிக் கொள்வதற்குமாகவே (அன்னாரின் இந்த வருகையின் நோக்கம்).

**நான் என் தோழர்களுக்கும் அனைத்து முஸ்லீம்களுக்கும் அருள்மிக்க ஒரு லைலத்துல் கதிர் முபாரக் தெரிவிக்கின்றேன்.** லைலத்துல் கதரின் இரட்டை அருட்கள் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ் வழங்குவானாக! ஒன்றாவது அருள் அல்லாஹ்வின் கலீஃ.பாவுடைய இந்த வருகை வாயிலாக கிடைப்பதும், இரண்டாவது அருள் ரமலான் மாதத்தின் லைலத்துல் கதிர் வழியாக உங்களுக்கு இறங்கிக் கொள்வதும் ஆகும். இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.

**Issued by:**

Jamaat Ul sahih Al Islam

Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Translated by:**

*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817